# தொல்காப்பியமும் பாணினீயமும் எழுத்தியல் பற்றிய ஓர் ஒப்பியல் ஆய்வு

ச. பத்மநாபன்

**ஆய்வுச் சுருக்கம்**

இந்தியப் பண்பாட்டு மரவில் தமிழ் மொழியும் சம்ஸ்கிருதமொழியும் தனித்துவம் மிக்க செவ்வியல் மரபுகளுடன் விளங்குகின்றன. இந்நிலையில் தமிழ்மொழி தென்மொழி என்றும் அழைக்கப்படும் தனித்துவத்துடன் விளங்குகின்றன. இம்மரபில் இவ்விரு மொழிகளுக்குமான மொழியியல் அந்தஸ்தில் திராவிட மொழிக் குடும்பத்தினையும், ஆரிய மொழிக் குடும்பத்தினையும் மூலத் தன்மையாகக் கொண்டமையை உணர முடிகின்றது. இம்மரபில் இந்தோ - ஆரியமரபில் சம்ஸ்கிருதமொழியின் மரபு மேலோங்கிச் செல்வதை மொழியியற் பார்வையில் நோக்க முடிகின்றது. இவ்வகையில் தமிழ் மொழியின் முதல் இலக்கண நூல் என்பது தொல்காப்பியம், சம்ஸ்கிருத மொழியின் முதல் இலக்கண நூல் பாணினீயம் என்பதும் எழுத்தியல் நிலையில் எத்தகைய கருத்துக்களைத் தம்முட் கையாண்டுள்ளன என்பதையும், இவ்விரு இலக்கண நூல்களும் அவ்வவ் மொழிக்குரிய தனித்துவத்துடன் விளங்கும் மேன்மை உயர் நிலையின் ஓர் ஒத்தநோக்குடைய சிந்தனையாக அமைவதனை நோக்க முடிகின்றது. மொழி என்றும் நிலையில் பேசப்படும் தன்மையும், ஒலியியல் முறையிலேயே அவ்வெழுத்துக்கள் முக்கியத்துவம் பெறுவதனையும் காண முடிகின்றது.

**திறவுச் சொல் :-** சூத்திரம். அக்ஷரம். லிபி. மாத்திரை. பாஷா

**அறிமுகம்**

தமிழ் மொழியின் இலக்கணத்தின் முதனூலாக விளங்குவது தொல்காப்பியம் ஆகும். இந்நூலின் அசிரியர் தொல்காப்பியர் என்பர். இந்நூல் எழுத்து, சொல், பொருள் எனும் மூன்று பகுதிகளைக் கொண்டு விளங்குகின்றது. சம்ஸ்கிருத மொழியின் இலக்கணத்தின் முதனூலாக விளங்குவது பாணினீயம் ஆகும். இந்நூலின் ஆசிரியர் பாணினி ஆவார். இந்நூல் எட்டு அத்தியாயங்களைக் கொண்டமைந்தமையால் அஷ்டாத்யாயீ என்றும் பாணினியால் இயற்றப்பட்டதால் பாணினீயம் என்றும் அழைக்கப்படும். இந் நூலில் எழுத்து, சொல், பற்றி மட்டுமே கூறப்படுகின்றன. பொருள், அணி, யாப்பு என்பன தனித்தனியாக இடம் பெறுவதும் சுட்டிக்காட்டத்தக்கது. தமிழ் மொழி இலக்கண மரபு மூவியல்புகளை உடையது என்பதும், சம்ஸ்கிருத மொழி இலக்கண இயல்பு, ஐந்து இலக்கண மரபுகளை உடையது என்பதும் மரபாகும். இவ்விரு மொழிகளுக்குமுரிய இலக்கண நூல்களில் எழுத்தியல் பற்றிப் பேசும் விடயங்கள் ஓர் ஒப்பியல் நோக்குடையதாக இவ் ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**தொல்காப்பிய எழுத்துக்கள் ·**

தமிழின் மொழி வடிவத்தில் ஒலி வடிவமான எழுத்துக்களின் தோற்றங்கள் பேசப்படுகின்றன. எழுத்துக்கள் உயிர் எழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள் எனப் பாகுபடுத்தப்படுகின்றன. அதன் வழி எழுத்தி யல் முதற்சூத்திரம்,

**எழுத்தெனப்படுப**

**அகரமுதல**

**னகர விறுவாய் முப்பஃதென்ப**

**சார்ந்துவரன் மரபின் மூன்றலங்கடேய (தொ. எழுத்து - 01)**

எனக் கூறுகின்றது. அவற்றுள் சார்ந்து வருபவை எவை என்பன?

**அவை தாங்**
**குற்றிய லிகரங் குற்றிய லுகர**
**மாய்தமென்ற**
**முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன**
**(தொ. எழுத்து - 02)**

என்று விளக்குகையில் குற்றிலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்பனவும் முப்ப தெழுத்தோடு சேர்ந்து வரும் வழக் குடையதாக சுட்டுகின்றது.

**உயிரெழுத்து**

உயிரெழுத்துக்கள் அ முதல் ஔ வரையாக பன்னிரெண்டு எழுத்துக்கள் உயிர் எனப்படும் (தொ. எழுத்து - 03 - 08)மெய் எழுத்துக்கள் மெய் எழுத்துக்கள் முதல் ன ஈறாக முப்பது ஆகும். (தொ. எழுத்து - 09)

**உயிர்ப்பாகுபாடு**

உயிர் எழுத்துக்கள் பன்னிரெண்டும் குற்றெழுத்து, நெட்டெழுத்து என வகுக்கப்ப டுகின்றது. (தொ. எழுத்து - 03 ,04) அவற்றின் வழி குற்றெழுத்துக்களாக / அ, இ, உ, எ, ஒ எனும் ஐந்து எழுத்துக்களும் குற்றெழுத்துக்கள் (குறில் எழுத்துக்களில்) எனப்படுகின்றன. (தொ. எழுத்து - 03 )ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என ஏழு எழுத்துக்களும் நெட்டெழுத்துக்கள் எனப்படுகின்றன (தொ. எழுத்து - 04). ஒலி அளவுகள் இவ்வெழுத்துக்களில் ஒலி அளவு டைய மாத்திரை ஆகும். மாத்திரை என்பது,

**கண்ணிமை நொடியென வவ்வே மாத்திரை**

**நுண்ணுதி னுணர்ந்தோர் கண்டவாறே (தொ. எழுத்து - 07)**

எனப்படுகிறது.

இந்நிலையில் குற்றுயிர்கள் ஒரு மாத்திரை அளவையும் (தொ. எழுத்து - 03)

பெறும் நெட்டுயிர்கள் இரண்டு மாத்திரை அளவையும்(தொ. எழுத்து - 04)

பெறுகின்றன. இவை அளபெடையேறும் தன்மையில் மூன்று அல்லது நான்கு மாத்திரை அளவையும்(தொ. எழுத்து - 05)

பெறுகின்றன.

**உயிர் மெய்யெழுத்துக்கள்**

உயிரெழுத்து பன்னிரெண்டும், மெய் யெழுத்து பதினெட்டுமே முப்பது உயிர் மெய் எழுத்துக்கள் என்பதன் வழி உயிர் எழுத்துக்கள் பன்னிரெண்டை நோக்கினோம். மெய்யெழுத் துக்கள் பதினெட்டு என்பனவற்றையும் அவற்றின் பிறப்பு, பாகுபாடு, மாத்திரை அளவு என்பனவற்றையும் நோக்குவோம்.

**னகார விறுவாய்ப்**

**பதினென் ணெழுத்து மெய்யென மொழிப** (தொ. எழுத்து - 09)

அவற்றுள் மெய்யெழுத்துக்கள் வல்லெ ழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து என மூன்றாக வகுக்கப்படுகின்றன. அதன் வழி

**வல்லெழுத் தென்ப க ச ட த ப ற** (தொ. எழுத்து - 19) என்றும்

**மெல்லெழுத் தென்ப ங ஞ ண ந ம ன** (தொ. எழுத்து - 20) என்றும்

**இடையெழுத் தென்ப ய ர ல வ ழ ள** (தொ. எழுத்து - 21) என்றும் கொள்ளப்படுகின்றது.

**ஒலியளவு**

மெய்யெழுத்திற்கான ஒலியளவு அரை மாத்திரை ஆகும் என்பதனை,

**மெய்யினளவே யரையென மொழிப** (தொ. எழுத்து - 11) எனக் கூறுகின்றது. எனினும், உயிர் மெய்யெழுத்து வரும் போது அவை உயிர் கொள்ளும் மாத்திரை அளவினையே கொள்ளுகின்றன. அதனை,

**மெய்யோ டியையினு முயிரிய ல்திரியா** (தொ. எழுத்து - 10 எனக் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

### எழுத்துக்களின் பிறப்பு

தொல்காப்பியர் காற்றானது எங்கிருந்து எவ்வாறு தோன்றி எழுத்துக்களைத் தோற்றுவிக்கின்றது என்பதனை மிகத் தெளிவுறக் கூறுகின்றார். இந்நிலையில்,

**உந்தி முதலா முந்துவளி தோன்றித்**

**தலையினு மிடற்றினு நெஞ்சினு நிலை இப்**

**பல்லு மிதழு நாவு மூக்கு**

**மண்ணமு முளப்பட வெண்முறை நிலையி**

**னுறுப்புற் றமைய நெறிப்பட நாடி**

**யெல்லா வெழுத்துஞ் சொல்லுங் காலைப்**

**பிறப்பி னாக்கம் வேறுவே றியல**

**திறப்படத் தெரியுங் காட்சி யான** (தொ. எழுத்து - 83) எனக் கூறுகின்றது.

இந்நிலையில் இதன் பொருளாக, தமிழெழுத்து எல்லாவற்றிற்கும் ஆசிரியன் கூறிய பிறப்பினது தோற்றரவையாங் கூறுமிடத்து கொப்பூழடியாகத் தோன்றி முந்துகின்ற உதானனென்னும் காற்று, தலையின் கண்ணும் மிடற்றின் கண்ணும் நெஞ்சின் கண்ணும் நிலைபெற்று, பல்லும் இதழும், நாவும், மூக்கும், அண்ணமுமென்ற ஐந்துடனே அக்காற்று நின்ற தலையும் மிடறும் நெஞ்சுங்கூட எட்டாகிய முறைமையை தன்மையோடு கூடி உறுப்புக்களோடு ஒன்றுற்று அமைய அவ்வெழுத்துக்களது தோற்றரவு வேறு வேறு புலப்பட வழங்குதலையுடைய, அதனை அறிவான் ஆராய்ந்து அவற்றின் வழியிலே மனம்பட அப்பிறப்பு வேறுபாடுகளை யெல்லாம் கூறுபட விளங்கும் என்றவாறு. (தொ. எழுத்து - பக். 100,101)

என நச்சினார்க்கினியார் உரையாசிரியர் தெளிவுபடுஸதகின்றார்.

தொப்புழின் வழி தோன்றிய உதான வாயுவே ஒலியடைய எழுத்துக்களைத் தோற்றுவிக்கின்றது. என்பதனூடாக உயிர் மெய் எழுத்துக்கள் எங்ஙனம் தேன்றுகின்றன. என்பதனை நோக்குவோம்.

### உயிர் எழுத்தின் பிறப்பு

**அவ்வழி**

**பன்னீ ருயிருந் தந்நிலை திரியா**

**மிடற்றுப் பிறந்த வளியி னிசைக்கும்**(தொ. எழுத்து - 84)

எனப் பொதுவாகக் கூறும் தன்மையிலிருந்து அ, ஆ(தொ. எழுத்து - 85), இ, ஈ, எ, ஏ, ஐ(தொ. எழுத்து - 86), உ, ஊ, ஒ, ஓ, ஔ(தொ. எழுத்து - 87) எனும் எழுத்துக்கள் முறையே அங்காந்து கூறும் முயற்சி அண்பல்லும் நுனிநாவிளிம்பும் உறவும் இதழ் குவித்துக் கூறவும் பிறந்தனவாகச் சுட்டப்படுகின்றது. இவ்வாறு உயிர் எழுத்துக்களின் பிறப்பு கூறப்படுகின்றது.

### மெய்யெழுத்தின் பிறப்பு

க முதல் ன வரையிலான மெய்யெழுத்துக்களுள்;

**க, ங - முதல் நா முதல் அண்ணம்**

(தொ. எழுத்து - 89)

**ச, ஞ - இடை நா இடை அண்ணம்**

(தொ. எழுத்து - 90)

**ட, ண - நுனி நா நுனி அண்ணம்**

(தொ. எழுத்து - 91)

**த, ந - அண்ணத்தைச் சேர்ந்த பல்லின தடியாகிய இடத்தில் நாவினது நுனி பரந்து சென்று தன் வழவு மிகவும் உறும்படி சேரல்**

(தொ. எழுத்து - 93)

**ற, ன - நானுனி மேனோக்கிச் சென்று அண்ணத்தைத் தீண்டுதல்**

(தொ. எழுத்து - 94)

**ர, ழ - நாவினது நுனி மேனோக்கிச் சென்று அண்ணத்தைத் தீண்டுதல்**

(தொ. எழுத்து - 95)

ல, ள - நா மேனோக்கிச் சென்று
தன் விளிம்பு
அண்பல்லினடியில்
உற அவ்விடத்து

அவ்வண்ணத்தை அந்நாத்
நீண்டலவும் அவ்வண்ணத்தை
நாதடவ 'ள' வும் தோன்றும்

(தொ. எழுத்து - 96)

ப, ம - மேலிதழும் கீழிதழும் தம்மிற்
கூடல்

(தொ. எழுத்து - 97)

வ - பல்லும் கீழிதழும்

(தொ. எழுத்து - 98)

ய - அண்ணத்தை அணைத்து
வருட (தொ. எழுத்து - 99)

இவ்வெழுத்துக்கள் தோன்றும் விதியை தொல்காப்பியம் எழுத்ததிகார பிறப்பியல் தெளிவுபடுத்தும். அதேவேளை மெல்லெழுத்துக்கள் ஆறும் (ங, ஞ, ண, ந, ம, ன) தமது பிறப்பிற்கு மூக்கின் வளியும் உண்டென்று(தொ. எழுத்து - 100) தெளிவுபடுத்துவது குறிப்பிடத்தக்கது.

ஆய்தம் - ஃ நெஞ்சு வளியால் பிறந்தது

(தொ. எழுத்து - 101)என்பர்.

மேலும் வேதங்களின் ஒலியின் தோற்றுவாய் பற்றி தாம் கூறாது நின்றதையும்(தொ. எழுத்து - 102)

தொல்காப்பியர் தெளிவுபடுத்துகின்றார்.

இவ்வாறாக தமிழ் எழுத்துக்களின் ஒலிவடிவம் தோன்றுமாற்றைத் தொல்காப்பியர் தெளிவுபடுத்துவது மனம் கொள்ளத்தக்கது.

**பாணினீய எழுத்துக்கள்**

சம்ஸ்கிருத இலக்கணமரபில் பாணினீயின் மாஹேஸ்வர சூத்திரங்களே சம்ஸ்கிருத எழுத்துக்கள் பற்றிய மிகச் சாரமான விடயமாகும். இம் மாஹேஸ்வர சூத்திரம் நடராஜப்பெருமான் நடனமாடும் வேளையில் தமது வலக்கையில் ஏந்திய உடுக்கை பதினான்கு தடைவைகள் ஒலித்தார். அவ்வொலியிருந்து பிறந்தவையே பதினான்கு சூத்திரங்கள் ஆகும்.

(மாஹேஸ்வர சூத்திரங்கள் நிருத்தா
வசானே நடராஜராஜோ நநாடகாம்
நவபஞ் சவாரம் உத்தர்து காம
சனகாதிசித்தைர் விமர்சயந்தி ஏதத்
சிவசூத்ரஜாலம்)

அவை சிவனிடமிருந்து பிறந்தமை காரணமாக மாஹேஸ்வர சூத்திரங்கள் எனப்படுகின்றன.

பாணினீய சிக்ஷா உடலிலிருந்து எழும் காற்று மார்பு, கழுத்து, தலை இவற்றின் வழியாகப் பல்வேறு இடங்களில் மாறுபட்டு வாயிற்சென்று அங்குள்ள நாக்கு, அண்ணம், பல், உதடு இவற்றால் மாறுபட்டும் மூக்கிற் சென்றும் வெளி வருகின்றது. எனச் சுட்டுகின்றது. இக்கருத்து தொல்காப்பியக் கருத்துக்கு ஒத்ததன்மையது.

**எழுத்துக்களின் வகை**

சம்ஸ்கிருத எழுத்துக்களும் உயிர், மெய் என்றேபாகுபடுத்தப்படுகின்றன. அவை ஸ்வரம் உன உயிர் எழுத்தையும், வ்யஞ்ஜனம் என மெய்யெழுத்தையும் சுட்டுகின்றன. இலக்கண சூத்திர அடிப்படையில் உயிர் எழுத்துக்கள் 'அச்' என்றும், மெய்யெழுத்துக்கள் 'ஹல்' என்றும் அழைக்கப்படுகின்றன. (வடமொழி வரலாறு ப, 30)

உயிர் எழுத்துக்கள் வாய் முழுவதும் திறக்க உருவாகும் எழுத்துக்கள் என்றும், மெய் யெழுத்துக்கள் வாய் முழுவதும் மூடப்படவோ சிறிது மூடப்பட்டு சிறிது திறக்கப்படவோ உருவாகும் எழுத்துக்கள் என்றும் அழைக்கப்படுகின்றன(வடமொழி வரலாறு ப, 32, 33)

. இதற்கு மேலாக பிற உதவியின்றி ஒலிப்பது 'ஸ்வரம்' என்றும், பிற உதவியால் வெளிப்படுத்தப்படுவது 'வ்யஞ்ஜனம்' என்றும்

அழைக்கப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது (வடமொழி வரலாறு ப, 32 - 33)

**உயிர் எழுத்துக்கள்**

சம்ஸ்கிருத மொழியில் உயிர் எழுத்துக்கள் பதினான்கு ஆகும். அதன் வழி உயிர் எழுத்துக்கள் தனியுயிர், சந்தியுயிர், மெய்யுயிர் என மூன்று வகைப்படும்(வடமொழி வரலாறு ப, 33 -34) இவை குறில், நெடில் என இருவகைப்படும் (வடமொழி வரலாறு ப, 34)

உயிர் எழுத்துக்களுள் 9 உயிர்களே முக்கியத்துவமுடையன. அவை பற்றியே மாஹேஸ்வர சூத்திரம் உணர்த்துகின்றது (மாஹஸ்வர சூத்திரம் 'அச்'). இவ்வொன்பது எழுத்துக்களும் நாசிகத்தோடு இணையும் போது 18 வகையான வடிவம் பெறுவதாகப் பாணிணி சுட்டுகின்றார் (பாணினீ சூத்திரம் - 1.1.8).

இவற்றுள் குற்றுயிர்களாக அ, (a), இ, (i), உ, (u), எ (e), ஒ (o), ஔ (au) என்பன சுட்டப்படுகின்றன.

இவை இயற்கையுயிர்கள் (Natural vowels) எனப்படுகின்றன(வடமொழி வரலாறு ப, 35)

நெட்டுயிர்களாக ஆ (ā), ஈ (), ஊ (ū),ஏ (e), ஓ (ō) என்பன சுட்டப்படுகின்றன.

இவற்றின் வழி உயிர்கள் பிறக்கும் இடங்களாகச் சுட்டுகையில், பிராதிசாக்யத்தில்

**அ, ஆ** - கழுத்தினும்

**இ, ஈ, ஏ, ஐ** - இடையண்ணம்
இடைநாவும் நெருங்குமிடம்

**உ, ஊ, ஓ, ஔ** - குவிந்த இதழ்

எனும் இடங்களில் எனச் சுட்டப்படுகின்றன (வடமொழி வரலாறு ப, 38)

பாணினீய சிக்ஷையில் பிறப்பிடங்களாக

**ஏ, ஐ** - கண்டதாலு

**ஓ, ஔ** - கண்டோஷ்டம்

எனவும் சுட்டப்படுகின்றது (வடமொழி வரலாறு ப, 38).

**உயிர் பாகுபாடு**

சம்ஸ்கிருத மொழியில் உயிர் எழுத்துக்கள் தனியுனிர், சந்தியுயிர், மெய்யுயிர் எனக் கண்டோம். இலக்கணப்பாகுபாட்டில் அவற்றைச் சாதாரண உயிர், குணஉயிர், விருத்தியுயிர் எனப் பாகுபடுத்துவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**ஒலியளவுகள்**

இலக்கணப் பாகுபாட்டில் கண்ணிமைப் பொழுது அல்லது கைநொடிப்பொழுதையே மாத்திரை அளவென்பர். இம்மாத்திரை அளவே ஒலிக்கான அளவு. இதில் சாதாரண உயிர்களுக்கு ஒரு மாத்திரையும் நெட்டுயிர்களுக்கு இரண்டு மாத்திரையும் குறிக்கப்படுகின்றது. 'ப்லுதம்' எனும் நிலையில் 3 அல்லது 4 மாத்திரை அளவைத் தூரத்தில் உள்ளோரைக் கூப்பிடுகையில் ஏற்படும் என்பர்(வடமொழி வரலாறு ப, 39)

**மெய்யெழுத்து**

சம்ஸ்கிருத மொழியில் மெய்யெழுத்துக்கள் 'ஹல்' எனச் சுட்டப்படுகின்றன. அதன் வழி மெய்யெழுத்துக்கள் 33 ஆகும். அவை பிறக்கும் இடம்கொண்டு பாகுபாடு செய்வது மரபு எனினும் அவற்றை ஐந்து வகையாகவும் வகைப்படுத்தி இலக்கணநூலில் கூறுவார்(வடமொழி வரலாறு ப, 39). இதற்கு ஏற்ப பாணினீசூத்திரம் தெளிவுபடுத்துகின்றது (பாணினீசூத்திரம் 1.1.9). இப் பாணினிசூத்திர உரையாசிரியர் சுட்டுகையில் உயிர் மெய் எழுத்துக்கள் எவ்வாறு தோன்றின என்பதனை சாரப்படக் கூறுவர். அச்சாரத்தின் விபரத்தினை, கீழ்காணும் அட்டவணை மூலம் மிகத் தெளிவாக அறிந்து கொள்ளலாம் (அட்டவணை 1 - லகுசித்தாந்த கௌமுதீ - ப. 18)

அட்டவணை - 1

*** वर्णोद्भवस्थानकोष्ठकम्—**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| अ क ख ग घ ङ ह ः | इ च छ ज झ ञ य श | ऋ ट ठ ड ढ ण र ष | ऌ त थ द ध न ल स | उ प फ ब भ म ⁀प ⁀फ | ञ म ङ ण न ं | ए ऐ | ओ औ | व | ⁀क ⁀ख | वर्णाः |
| कण्ठः | तालु | मूर्धा | दन्ताः | ओष्ठौ | नासिका | कं·ता· | कं·ओ· | दं·ओ· | जि·मू· | स्थानानि |

அட்டவணை - 2

*** आभ्यन्तरबाह्यप्रयत्नज्ञानार्थकं कोष्ठकम्—**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| आभ्यन्तरप्रयत्नाः | स्पृष्टाः | | | | | ईषत्स्पृष्टाः | ईषद्विवृताः | विवृताः | | संवृताः |
| संज्ञाः | स्पर्शाः | | | | | अन्तःस्थाः | ऊष्माणः | | स्वराः | |
| वर्णाः | क च ट त प | ख छ ठ थ फ | ग ज ड द ब | ङ ञ ण न म | घ झ ढ ध भ | य व र ल | श ष स | ह | अ इ उ ऋ ऌ ए ओ ऐ औ | ह्रस्वोऽकारः प्रयोगे |
| बाह्यप्रयत्नाः | अ·प्रा·म·प्रा· विवाराः श्वासाः अघोषाः | | अल्पप्राणाः संवाराः नादाः घोषाः | | म· प्रा· संवाराः नादाः घोषाः | अ·प्रा· संवाराः नादाः घोषाः | म· प्रा· विवाराः श्वासाः अघोषाः | म· सं· ना· घो· | उदात्तानुदात्तस्वरिताः | |

**ஒப்பீடு**

பாணிணீ, தொல்காப்பியம் எனும் இரு இலக்கணங்களையும் ஒப்புநோக்குகையில் இவை இரண்டும் எழுத்துக்களை ஒலியின் வடிவமாகவே கொள்ளுகின்றன. ஒலியின் அளவியல் முறை மாத்திரை அளவேயாகும். உயிர்எழுத்து சம்ஸ்கிருதத்தில்14 உம், தமிழில்12 உம் கொள்ளப்படுகின்றன. எனினும் எழுத்தியல் முறையில் எழுத்துக்கள் வேறுபடுகின்றன. மெய்யெழுத்துக்கள் தமிழ்மொழியில் 18 இருக்க இன் சம்ஸ்கிருத்தில் 33 ஆகின்றன. அவை பல்வேறு ஒலியழுத்தத் திறன்களைக் கொண்டு விளங்குகின்றமை பாணிணீ மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டுவது மனம் கொள்ளத்தக்கது. ஒலியின் பிறப்பிடம் பற்றி பாணிணீ ஆசிரியர் தொல்காப்பிய ஆசிரியர் ஆகிய இருவருக்குமிடையில் ஒத்த தன்மைகள் காணப்படுவது மனம் கொள்ளத்தக்கது. ஒலி வடிவ எழுத்துக்களின் மாறுபாடுகள் சம்ஸ்கிருத மொழியில் மிக நுட்பமாக பேசப்படுவதால் அவை ஒன்று சேர்கின்ற சந்தர்ப்பங்களில் ஒலிகளுக்கான மோதல்களோ தனித்துவம் மிக்கனவாக அமைகின்றன. (அட்டவணை 2 - லகுசித்தாந்த கௌமுதீ - ப. 19)

**நிறைவுரை**

பாணிணீ கி. மு 4 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகவும், தொல்காப்பியம் கி. மு 2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகவும் கொள்ளப்படும் முதனிலை இலக்கண நூல்கள் ஆகும். இவை ஒலி நிலையிலேயே எழுத்துக்களை அறிமுகம் செய்கின்றன. அவ்வொலிகளின் பிறப்பிடம், வடிவம் கொடுக்க முடியாத ஒலி வடிவம், தனித்துவம் மிக்க ஒலிவடிவம் எனத் தற்காலப் பாகுபாட்டு வடிவங்களிலிருந்து தம்மை மாறுபடுத்தி அடையாளப்படுத்தி நிற்பதனையும் கட்டுக்கோப்புடைய இலக்கண நூல்கள் ஒன்றுபட்ட சிந்தனையில் எழுத்துக்களின் தோற்றுவார்களைக் கூறி நிற்பதனையும் அவை ஒவ்வொரு மொழிக்குமுரிய தனித்துவமிக்க மொழியியல் சார் தனித்துவமாகவும் அம்மொழிக்குரிய சீரிய சிந்தனைகளின் கட்டமைக்கப்பட்ட இலக்கண வடிவமாகவும் காண முடிகின்றது.

**உசாத்துணை நூல்கள்**

**மூலநூல்கள்**

1. **சித்தாந்த கௌமுதீ, (1927),**

   பட்டோஜி தீக்ஷிதர் உரையுடன் பாலமனோகரமா, சென்னை பாகம் - I

2. **லகு சித்தாந்த கௌமுதீ, (1997),**

   வரதாச்சாரியார், கீதாபிரஸ், கொரக்பூர்

3. **தொல்காப்பியம், (1952),**

   எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியார் உரை, கணேசையர் பதிப்பு, ஈழ கேசரி பதிப்பகம் சுன்னாகம்.

**ஏனையவை**

சுப்பிரமணிய சாஸ்திரி, P. S, (1950) வடமொழி வரலாறு, அண்ணாமலை நகர், அண்ணாமலை.